(ஒன்பதாவது பாராளுமன்றம் — ஐந்தாவது கூட்டத்தொடர்)

**இல. 17.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2024 ஏப்ரல் 25 வியாழக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

கௌரவ **மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

கௌரவ **அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

கௌரவ **தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

கௌரவ **மஹிந்த அமரவீர,** கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) ரமேஷ் பதிரண,** கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர்

கௌரவ **நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

கௌரவ **பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

கௌரவ **சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

கௌரவ **(திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

கௌரவ **கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

கௌரவ **சனாதிபதி சட்டத்தரணி எம். யூ. எம். அலி சப்ரி,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

கௌரவ **சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ **ரன்ஜித் சியம்பலாபிடிய,** அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

கௌரவ **(திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) டயனா கமகே,** சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ சம்பத் அதுகோரல**

**கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க**

**கௌரவ வஜிர அபேவர்தன**

**கௌரவ அஸோக அபேசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய**

**கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்**

**கௌரவ தவராஜா கலை அரசன்**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ சட்டத்தரணி உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ மனோ கணேசன்

கௌரவ வீரசேன கமகே

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கிங்ஸ் நெல்சன்

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஜகத் பிரியங்கர

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ எஸ்.சீ. முதுகுமாரண

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ ரொசான் ரணசிங்க

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ**

**கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ**

**கௌரவ எம். ராமேஷ்வரன்**

**கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ காமினி வலேபொட**

**கௌரவ இரான் விக்கிரமரத்ன**

**கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ**

**கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க**

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சனாதிபதியின் செய்திகள்:** சனாதிபதியிடமிருந்து கிடைத்த பின்வரும் செய்தியைச் சபாநாயகர் வாசித்தார்:—

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/4/5/1

2024 ஏப்பிரல் மாதம் 22 ஆந் திகதி

**மாண்புமிகு மஹிந்த யாப்பா அபேவர்த்தன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்படும் ஆயுதந்தாங்கிய படையின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்பட்ட பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

**ரணில் விக்கிரமசிங்க**
சனாதிபதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) கல்வி அமைச்சர்—

(i) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 நவம்பர் 30 ஆம் திகதிய 2360/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 சனவரி 02 ஆம் திகதிய 2365/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 சனவரி 07 ஆம் திகதிய 2365/84 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iv) (2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 பெப்ரவரி 19 ஆம் திகதிய 2372/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(v) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 மார்ச் 01 ஆம் திகதிய 2373/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(vi) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி அறவீடு தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 சனவரி 04 ஆம் திகதிய 2365/50ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(vii) (அத்தியாயம் 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வை வரி தொடர்பான தீர்மானம்

(2024 சனவரி 04 ஆம் திகதிய 2365/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அக்கட்டளைகள் மற்றும் தீர்மானம் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) கல்வி அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) கல்வி அமைச்சர், 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான நில அளவைகள் சபையின் வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்து இவ்வறிக்கைகள் உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) பொதுமக்கள் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ டிரான் அலஸ் சார்பாக குழு உறுப்பினர் கௌரவ அகில எல்லாவல அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, (351 ஆம் அத்தியாயமான) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 14 மற்றும் 23 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 52 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரினால் 2024 மார்ச் 22 ஆம் திகதி ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பான குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா , சார்பாக குழு உறுப்பினர் கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரிச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான கட்டளை;

(ii) மதுவரி கட்டளைச்சட்டத்தின் கீழான அறிவித்தல் (இல. 3/2023); மற்றும்

(iii) மதுவரி கட்டளைச்சட்டத்தின் கீழான அறிவித்தல் (இல. 4/2023)

தொடர்பான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) போத்தல, மீப்பாவல, கிறீன்விவ், இல. 69 இல் வதியும் திரு. அதுல ஜயசேகரவினது 2024.01.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) யட்டியன்தொட்ட, மஹவில வீதி, ஹல்கஹகொடுவ எனும் முகவரியில் வதியும் திரு. எச்.எம்.எஸ்.என்.கே. கருணாரத்னவினது 2024.01.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) அலவதுர, கேகாலை வீதி, சீ 140 எனும் முகவரியில் வதியும் திரு. கே. டிரோன் கொட்பிரீயினது 2024.01.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) ஹெட்டிமுல்ல, மலவிட்ட, பஹலவத்த, டி/31/ஏ யில் வதியும் திரு. கே.ஜி.ஜி.கே. சேனாநாயக்கவினது 2023.10.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) நெலுந்தெனிய, கொட்வெல்ல, எகொடவத்த, இல. ஏ/63 இல் வதியும் திரு. ஆர்.எம்.சீ.கே. ரத்னாயக்கவினது 2023.12.17 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(vi) கங்துன, மெதகம, இஹலவத்த, சீ 22/1 ஏ யில் வதியும் திரு. எஸ்.எம். ரத்னபாலவினது 2024.01.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய சமர்ப்பித்தார்.

(2) பூஜாபிட்டிய, பலிபான, இல. 166 இல் வதியும் திருமதி எஸ்.டப்ளியூ.சீ. ஹேமலதாவினது 2023.11.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ விஜித பேருகொட சமர்ப்பித்தார்.

(3) ஹிங்குரக்கொட, யோத எல, இல. 05 இல் வதியும் திருமதி எச்.எம். லங்கா ராஜினி விஜேதிலகவினது 2023.10.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சிறிபால கமலத் சமர்ப்பித்தார்.

(4) ஹெம்மாதகம, ஹத்கம்பல, ஜயசிறி ஸ்டோர்ஸ், இல. 115/பீ யில் வதியும் திரு. எச். சமிந்த குமாரவினது 2023.05.17 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ வாசுதேவ நாணாயக்கார சமர்ப்பித்தார்.

(5) பாணந்துறை, மஹவில, ஹொரன வீதி, மனஹர உயன, இல. 03/ஏ யில் வதியும் திருமதி பீ.டி.டி. பெரேராவினது 2024.01.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) மஞ்சுளா திசாநாயக்க சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதிகோரும் பிரேரணைகள் :**கௌரவ சார்ள்ஸ் நிர்மலநாதன் அனுவதிக்க கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல பின்வருமாறு பிரேரித்தார்,— அரசியலமைப்பின் 66 (ஊ) உறுப்புரையின் கீழ், திருகோணமலை தேர்தல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ இராஜவரோதியம் சம்பந்தன் அவர்களுக்கு 2024 ஏப்ரல் 25 ஆம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளுக்குச் சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணையை சமர்ப்பித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. இலங்கை மின்சாரம்:** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம் — மின்சாரத் தொழிலுக்கான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்பாடு செய்வதற்கும்; தேசிய மின்சார மதியுரைப் பேரவையைத் தாபிப்பதற்காக ஏற்பாடு செய்வதற்கும்; இச்சட்டத்தின் நியதிகளின்படி 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சாரத்தொழிலுக்கான ஒழுங்குபடுத்துநராகவிருப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கும்; 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழான எந்தக் கூட்டிணைக்கப்பட்ட உருவகங்களில் மின்பிறப்பாக்கம், மின்கடத்துகை, மின்விநியோகிப்பு, மின்வியாபாரம், மின்வழங்குகை மற்றும் மின்பெறுகை சம்பந்தமான எல்லாச் செயற்பாடுகளும் உரித்தாக்கப்பட வேண்டுமோ அந்தக் கூட்டிணைக்கப்பட்ட உருவகங்களின் கூட்டிணைப்புக்கு ஏற்புடையற்பாலனவான சட்டவாக்க வழிமுறைகளை ஏற்பாடுசெய்வதற்கும்; தொடர்புபட்ட எல்லாச் செயற்பாடுகளுக்கும் ஏற்புடையற்பாலனவாக இருக்கவேண்டிய செயல்முறைகளைக் குறித்துரைப்பதற்கும்; 1969 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச்சபைச் சட்டத்தையும் 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தையும் நீக்குவதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2024 மே 09 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் வலுச்சக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**7. பாராளுமன்ற அமர்வுகள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 10.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. பாராளுமன்ற அலுவல்கள்:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 6 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1):** “அல் பலாஹ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்” எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ ஏ.எச்.எம். பௌஸி பிரேரிக்க அதனை கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ் அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் கல்வி அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**10. சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2):** “இலங்கை கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்களுக்கான சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்” எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா பிரேரிக்க அதனை கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

(மு.ப. 10.25 மணிக்கு கௌரவ பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

**11. மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1):** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் VII ஆம் பகுதியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 யூன் 28 ஆம் திகதிய 2338/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2):** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 21, 22, 23, 24 மற்றும் 24அ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஒக்டோபர் 05 ஆம் திகதிய 2352/29 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.01.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

.பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**13. மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் :** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின், 22 ஆம் பிரிவின் கீழ் மதுபானங்கள் மீதான மதுவரித் தீர்வை தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 டிசம்பர் 31 ஆம் திகதிய 2364/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2023 )

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**14. உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தி வரி தொடர்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 டிசம்பர் 31 ஆம் திகதிய 2364/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.02 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**15. அத்தியவசிய பொதுமக்கள் சேவைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்:** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2024 ஏப்ரல் 19 ஆம் திகதிய 2380/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.04.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**16. ஒத்திவைப்பு (உயிர்த்தஞாயிறு தாக்குதலின் பின்னணியிலுள்ள உண்மையை வெளிக்கொணருவதிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதிலுமுள்ள தாமதம்):** ''இப்பாராளுமன்றம் தற்பொழுது ஒத்திவைக்கப்படுமாக'' என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

ஒத்திவைப்பு விவாதத்தை மேலும் தொடருவதற்கான கட்டளை வாசிக்கப்பட்டது. (விவாதத்திற்குரிய விடயம் 2024 ஏப்ரல் 24)

பிரேரணை மீண்டும் எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

“கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார தலைமை தாங்குவாராக” என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 12.12 மணிக்கு கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார தலைமை தாங்கினார்.)

“கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப் தலைமை தாங்குவாராக” என கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.11 மணிக்கு கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப் தலைமை தாங்கினார்.)

“கௌரவ வேலு குமார் தலைமை தாங்குவாராக” என கௌரவ கயந்த கருணாதிலக்க பிரேரிக்க அதனை கௌரவ இரான் விக்கிரமரத்ன அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.28 மணிக்கு கௌரவ வேலு குமார் தலைமை தாங்கினார்.)

“விவாதம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

அதிலிருந்து விவாதம் 2024 ஏப்ரல் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம் பி.ப. 5.16 மணிக்கு சபைக்குத் தலைமைதாங்கும் உறுப்பினரால் இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க 2024 ஏப்ரல் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.